**பெல்மதுள்ள பிரதேச சபையின் 2026.02.11 ஆம் திகதி நடைபெற்ற பொது சபைக் கூட்டத்தின் அறிக்கை**

பெல்மதுள்ள பிரதேச சபையின் பொதுச் சபைக் கூட்டம் 2026 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு கௌரவ தலைவர் திரு. எம்.ஜீ.ஏ. தர்மசிறி மாணிபுற அவர்களின் தலைமையில் பிரதேச சபையின் கேட்போர்கூடத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்திற்கு கீழ் பெயர் குறிப்பிடப்பட்டு உள்ள கொரவ பிரதேச சபை உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

| | |
|---|---|
| 02. கௌரவ பிரதேச சபை உப தலைவர் | - திரு. எச்.ஜீ. நலின் சேனக மாகம்மன |
| 03. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. ஏ.டி.டப்ளிவ். சோமரத்ன |
| 04. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. எச்.எம். சரத் உஷான் மஹனாம |
| 05. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. கே.டி. ருவன் சானக பியரத்ன |
| 06. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. ஏ.வீ. நிர்மிக தீபால் அபேவர்தன |
| 07. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. கே.ஜீ. சந்திரலால் |
| 08. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. ஆர்.எல். இந்திக கயான் லியனகே |
| 09. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. டி.எம். மஞ்சுல தசநாயக்க |
| 10. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. எம்.ஏ. புஸ்பகுமார தனசேகர |
| 11. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. டப்ளிவ்.ஏ. கயான் புஸ்பகுமார |
| 12. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திருமதி. டப்ளிவ்.எம். சிறியானி வீரசேகர |
| 13. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. கே. சுசன்த்த பிரேமகுமார |
| 14. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. ரீ.கே. சம்பத் சிறிசான்த்த |
| 15. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. டி.எல். யுரெஸ் புஸ்பகுமார |
| 16. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. டப்ளிவ். வசன்த குமாரசிறி |
| 17. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. ஜீ. இந்திக்க குமார |
| 18. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. ஏ.எம்.ஏ. இசுரு சம்பத் அலகியவன்ன |
| 19. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திருமதி. பி. துசாரி தமயன்தி சில்வா |
| 20. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திருமதி. எச். ஞானலதா ஹப்புதன்த்திரி |
| 21. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திருமதி. எம். சுலாரி சந்தரேகா மாகாவிட்ட |
| 22. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. ஜீ.கே. சுமேத லக்மால் |
| 23. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. டப்ளிவ். இந்திக்க உதய குமார குணவர்தன |
| 24. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. மஞ்சு டயஸ் விக்கிரமனாயக்க |
| 25. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. ஏ.எப். ஜகத் சேனாரத்தின |
| 26. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. பி. நிசான்த குமார புத்தாரச்சி |
| 27. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திருமதி. ரீ. சிறியானி ஜானகி பீரிஸ் |
| 28. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திருமதி. இராஜரத்தினம் புவனேஸ்வரி |
| 29. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திருமதி. எம். பிரதீபா இந்துமிணி குலரத்ன |
| 30. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திருமதி. வெரங்ஜா காமனி விஜேரத்தின |
| 31. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. டப்ளிவ்.டப்ளிவ். மொஹான் மஞ்சுல |
| 32. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. ஆர். திசோக் |
| 33. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. கே. சான்த புஸ்பகுமார குடாவத்த |
| 34. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. எஸ்.ஏ. சுகத் சான்த அமரசேகர |
| 35. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திருமதி. மயுரி சத்துரிகா பரணமான்ன |
| 36. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. ஆர். தனேஸ் குமரன் |
| 37. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. டப். ஜெகன் மோஹன் |

வருகைதந்து இருந்த அனைவரும் தமது சமய அனுட்டானங்களை பின்பற்றி, கூட்டத்திற்கு வருகைதந்து இருக்கும் கௌரவ உப தலைவர், கௌரவ எதிர்கட்சித் தலைவர் உட்பட ஆளும் கட்சி எதிர் கட்சி உறுப்பினர்கள் அனைவரையும், செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்கள் அனைவரையும் கௌரவ தலைவர் அவர்கள் வரவேற்றதுடன் கூட்டத்தின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

01. 2026.01.14 **பொது சபைக் கூட்ட அறிக்கையை சபையில் நிறைவேற்றிக் கொள்ளல்.**

கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டப். ஜெகன் மோஹன் அவர்கள் தொழிநுட்ப சேவைகள் குழுவில் இருந்தும் மற்றும் வீடமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி குழுவில் இருந்தும், கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஆர். தனேஸ் குமரன் அவர்கள் நிதி மற்றும் கொள்கை செயற்பாட்டுக் குழுவில் இருந்தும் விலகிக்கொண்டார்கள்.

மேற்படி திருத்தங்களுக்கு அமைய 2026.01.14 ஆம் திகதி நடைபெற்ற பொது சபை கூட்ட அறிக்கையை சபையில் நிறைவேற்றுவது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஆர்.எல். இந்திக கயான் லியனகே அவர்கள் பிரேரிக்க அதை கௌரவ பிரதேச சபை உறுப்பனர் திரு. கே. சுசன்த்த பிரேமகுமார அவர்கள் ஆமோதித்ததன் பின்னர் ஏகமனதாக சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**02. கௌரவ தலைவர் அவர்களினால் சபைக்கு முன்வைக்க வேண்டிய அறிவித்தல்கள். –**

2025 ஆம் ஆண்டிற்கான கணக்குகள் சபைக்கு முன்வைப்பதற்கு பெப்ரவரி மாதம் இறுதியில் விசேட பொது சபைக் கூட்டம் ஒன்று கூட்டுவதற்கு முடிவுகள் எடுக்கப்பட்டு உள்ளன.

**03. பிரதேச சபையின் பொதுச் சபைக் கூட்டத்திற்கு சமூகம் அளிக்காமை தொடர்பாக அனுமதி பெறல் சம்பந்தமான பிரேரணை - இல்லை**

04. **கௌரவ சபைக்கு அனுப்பப்பட்டுள்ள நினைவுக்குறிப்புக்கள், பொதுமக்களின் புகார்கள், முறைப்பாடுகள் பொது சபைக்கு முன்வைத்தல் :- இல்லை**

**05. உரிய முறையில் காலம் வழங்கப்பட்டு உள்ள பிணக்குகள் :- இல்லை**

**06. உரிய முறையில் காலம் வழங்கப்பட்டு உள்ள பிரேரணைகள்**

1. **கௌரவ பிரதேச சபை தலைவர் திரு. எம்.ஜீ.ஏ. தர்மசிறி மாணிபுற அவர்களின் பிரேரணைகள்**

1. 2025 ஆம் ஆண்டிற்காக மேற்கொள்ளப்பட்ட பொருள் ஆய்வு தொடர்பான அவ் ஆய்வு குழு மூலம் வழங்கப்பட்டுள்ள பரிந்துரைகளை நிறைவேற்றுவதற்கு அனுமதியை பெற்றுத் தருமாறு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஆர்.எல். இந்திக கயான் லியனகே அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், 2025 ஆம் ஆண்டிற்காக மேற்கொள்ளப்பட்ட பொருள் ஆய்வு தொடர்பான அவ் ஆய்வு குழு மூலம் வழங்கப்பட்டுள்ள பரிந்துரைகள் தொடர்பாக ஒரு அவதானிப்பு செய்யப்படல் வேண்டும் என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.டப்ளிவ். சோமரத்ன மற்றும் கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டி.எம். மஞ்சுல தசநாயக்க அவர்கள் தெரிவித்தனர்.

கருத்து தெரிவிக்கையில், இந்த அறிக்கை முன்வைப்பதற்கு காலக்கெடு உள்ளது என்றும், மார்ச் மாதம் 15 அம் திகதி ஆகும்போது பொருள் ஆய்விற்கு உரிய அனைத்து நடவடிக்கைகளும் பூர்த்தி செய்ய வேண்டும் என்றும், ஆய்வின் பரிந்துரைகளாக குறிப்பிடப்படுவது சில பொருள் வகைகளில் காணப்படும் குறைபாடுகள் மற்றும் பதிவுகள் மேற்கொள்ளும் போது ஏற்பட்டுள்ள குறைபாடுகள், கைவிடுதல் பிழைகள் என்பன ஆகும் என்றும் கமிட்டியின் பொறுப்பானது இக் குறைபாடுகளை சுட்டிக் காட்டுவது என்றும் நீண்ட காலம் எடுக்காமல் இந்த விடயங்களை பூர்த்தி செய்ய வேண்டும் என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஆர்.எல். இந்திக கயான் லியனகே அவர்கள் தெரிவித்தார்.

ஆனால் உரிய காலத்தில் பொருள் ஆய்வு தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் அவ் ஆய்வு கமிட்டி மூலம் வழங்கப்பட்டுள்ள பரிந்துரைகள் அமுல்படுத்துவது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.டப். சோமரத்ன அவர்கள் தெரிவித்தார்.

**முடிவுகள் இலக்கம் 01 (1)**

2025 ஆம் ஆண்டிற்காக மேற்கொள்ளப்பட்ட பொருள் ஆய்வு தொடர்பான அவ் ஆய்வு குழு மூலம் வழங்கப்பட்டுள்ள பரிந்துரைகளை அமுல்படுத்துவது தொடர்பாக சபையின் அனுமதியை பெற்றக்கொள்வதற்கு முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணை ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

02. 2025 ஆம் ஆண்டிற்காக மேற்கொள்ளப்படும் பொருள் ஆய்வு நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கமிட்டி உறுப்பினர்களைக் கொண்ட மதிப்பீட்டு கமிட்டி, ஏலவிற்பனைக் கமிட்டி, முறைகேடுகளை ஆராயும் கமிட்டி போன்றவற்றை நியமிப்பதற்கு பிரேரிக்கின்றேன்.

**<u>மதிப்பீட்டு கமிட்டி</u>**

| | |
|---|---|
| திரு. ஜீ.கே. சுமேத லக்மால் | - கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| திரு. கே.டப்.எம்.எஸ்.ரீ.எஸ். ஆனந்த | - இயந்திர பொறியியலாளர் |
| திருமதி. எம்.ஜீ.எஸ். மல்லிகா | - சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் (மேற்பார்வை உத்தியோகத்தர் ) |
| திரு. ஜே.எம்.எஸ்.கே. பண்டார | - பிரதான முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் |
| திரு. பி.எம்.அயி.எஸ். யோகரத்ன | - தொழிநுட்ப உத்தியோகத்தர் |
| திருமதி. கே.எம்.என். குணரத்ன | - வருமான பரிசோதகர் |

**<u>ஏலவிற்பனைக் கமிட்டி</u>**

| | |
|---|---|
| திரு. டப்.ஏ. கயான் புஸ்பகுமார | - கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| திருமதி. எம்.ஜீ.எஸ். மல்லிகா | - சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| செல்வி. எஸ். இரத்னாவதி | - அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| திரு. ஜே. உபனந்த | - அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| திருமதி. டப்.எம்.ரீ. ஹர்ஷனி | - அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| டப்.டி.ஆர். விஜேந்திர | - அபிவிருத்தி உத்தியோகத்தர் |

**<u>முறைகேடுகளை ஆராயும் கமிட்டி</u>**

| | |
|---|---|
| திரு. ஏ.எப். ஜகத் சேனாரத்தின | - கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| திருமதி. எம்.ஜீ.எஸ். மல்லிகா | - சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| திரு. ஏ.பி.எஸ். சேனாரத்ன | - அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| திருமதி. எம்.வீ.ஏ. புஸ்பகூரிய | - அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| திருமதி. கே.எம்.டி.எஸ். செனெவிரத்ன | - அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| திருமதி. ஆர்.ஏ.டி.பி. இரணசிங்க | - அபிவிருத்தி உத்தியோகத்தர் |

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. எம்.ஏ. புஸ்பகுமார தனசேகர அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், இந்த மூன்று கமிட்டிகளுக்கும் மேலும் மூன்று உறுப்பினர்கள் சேர்க்கப்படல் வேண்டும் என்று பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.டப். சோமரத்ன அவர்கள் தெரிவித்தார்.

**முடிவுகள் இலக்கம் 02**

2025 ஆம் ஆண்டிற்காக மேற்கொள்ளப்படும் பொருள் ஆய்வு நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக மதிப்பீட்டு கமிட்டிக்கு திரு. பி. நிசாந்த குமார புத்தாரச்சி, ஏலவிற்பனைக் கமிட்டிக்கு திரு. ஆர். தனேஸ் குமரன், மற்றும் முறைகேடுகளை ஆராயும் கமிட்டிக்கு திரு. டப்ளிவ். இந்திக்க உதய குமார குணவர்தன உட்பட கீழ் பெயர் குறிப்படப்பட்டுள்ள கமிட்டி உறுப்பினர்களைக் கொண்ட மதிப்பீட்டு கமிட்டி, ஏலவிற்பனைக் கமிட்டி, முறைகேடுகளை ஆராயும் கமிட்டி போன்றவற்றை நியமிப்பது உகந்தது என்று ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

**<u>மதிப்பீட்டு கமிட்டி</u>**

| | |
|---|---|
| திரு. ஜீ.கே. சுமேத லக்மால் | - கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| திரு. கே.டப்.எம்.எஸ்.ரீ.எஸ். ஆனந்த | - இயந்திர பொறியியலாளர் |
| திருமதி. எம்.ஜீ.எஸ். மல்லிகா | - சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் (மேற்பார்வை உத்தியோகத்தர் ) |
| திரு. ஜே.எம்.எஸ்.கே. பண்டார | - பிரதான முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் |
| திரு. பி.எம்.அயி.எஸ். யோகரத்ன | - தொழிநுட்ப உத்தியோகத்தர் |
| திருமதி. கே.எம்.என். குணரத்ன | - வருமான பரிசோதகர் |

**ஏலவிற்பனைக் கமிட்டி**

| | |
|---|---|
| திரு. டப்.ஏ. கயான் புஸ்பகுமார | - கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| திருமதி. எம்.ஜீ.எஸ். மல்லிகா | - சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| செல்வி. எஸ். இரத்னாவதி | - அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| திரு. ஜே. உபனந்த | - அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| திருமதி. டப்.எம்.ரீ. ஹர்ஷனி | - அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| டப்.டி.ஆர். விஜேந்திர | - அபிவிருத்தி உத்தியோகத்தர் |

**முறைகேடுகளை ஆராயும் கமிட்டி**

| | |
|---|---|
| திரு. ஏ.எப். ஜகத் சேனாரத்தின | - கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| திருமதி. எம்.ஜீ.எஸ். மல்லிகா | - சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| திரு. ஏ.பி.எஸ். சேனாரத்ன | - அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| திருமதி. எம்.வீ.ஏ. புஸ்பசூரிய | - அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| திருமதி. கே.எம்.டி.எஸ். செனெவிரத்ன | - அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| திருமதி. ஆர்.ஏ.டி.பி. இரணசிங்க | - அபிவிருத்தி உத்தியோகத்தர் |

03. சாரதியாக கடமை புரிந்த திரு. எம்.ஜீ. சந்திரசேன என்பவரிடம் இருந்து அறவிட்டுக்கொள்ள முடியாத ஆவணங்களில் காணப்படும் ரூபா. 42,730.50 தொகைக்கு உரிய நிதி பிரமாணம் 104(4) இற்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட ஆய்வு அறிக்கையின் பரிந்துரைகளுக்க ஏற்ப அந்த தொகையை பதிவழிப்பதற்கு கௌரவ ஆளுநர் அவர்களின் அனுமதியை பெறுவதற்கு முன்வைப்பதற்கு சபை முடிவு ஒன்றை பெற்றுக்கொள்வதற்கு கௌரவ சபையிடம் முன்வைக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.எம்.ஏ. இசுரு சம்பத் அலகியவன்ன அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 03**

பெல்மதுள்ள பிரதேச சபையில் சாரதியாக கடமை புரிந்த திரு. எம்.ஜீ. சந்திரசேன என்பவரிடம் இருந்து அறவிட்டுக்கொள்ள முடியாத ஆவணங்களில் காணப்படும் ரூபா. 42,730.50 தொகைக்கு உரிய நிதி பிரமாணம் 104(4) இற்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட ஆய்வு அறிக்கையின் பரிந்துரைகளுக்க ஏற்ப அந்த தொகையை பதிவழிப்பது உகந்தது என்று ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

04. 2024 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட சேதனப் பசளை நிலையத்தில் கலி குழிகளுக்காக கூரை நிர்மாணித்தல் மற்றும் காணப்படும் கூரையில் மழை நீர் வழிந்தோடும் தடங்கள் உட்பட குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் திட்டத்திற்கு உரிய வேலை முடிவு பில்லிற்கு உரிய ரூபா. 3,732,258.32 தொகை அலுவலகத்திற்கு கிடைத்து உள்ளது இதனால் இந்த தொகையை ஒப்பந்தக்காரர் ஆகிய ஹல்பாவிய கிராம அபிவிருத்தி சங்கத்திற்கு விடுவிப்பதற்கு அனுமதி பெறுவதற்கு கௌரவ சபையிடம் முன்வைக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டப்.ஏ. கயான் புஸ்பகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், சேதனப் பசளை நிலையத்தில் கலி குழிகளை நிர்மாணிப்பது உகந்தது என்றும், அதன் மூலம் பெல்மதுள்ள வாழ் மக்களுக்கு பெரிய ஆருதலான விடயம் என்றும் கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டி.எம். மஞ்சுல தசனாயக்க அவர்கள் தெரிவித்தார்.

**முடிவுகள் இலக்கம் 4**

2024 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட சேதனப் பசளை நிலையத்தில் கலி குழிகளுக்காக கூரை நிர்மாணித்தல் மற்றும் காணப்படும் கூரையில் மழை நீர் வழிந்தோடும் தடங்கள் உட்பட குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் திட்டத்திற்கு உரிய வேலை முடிவு பில்லிற்கு உரிய ரூபா. 3,732,258.32 தொகை அலுவலகத்திற்கு கிடைத்து உள்ளது இதனால் இந்த தொகையை ஒப்பந்தக்காரர் ஆகிய ஹல்பாவிய கிராம அபிவிருத்தி சங்கத்திற்கு விடுவிப்பது உகந்தது என்று ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

05. பெல்மதுள்ள பிரதேச சபைக்கு ஊழியம் கொள்வனவு செய்யும் அடிப்படையில் கீழ் 03 மாதங்களுக்கு ஒரு தடைவ பணி பிரியும் விதத்தில் ஆட்சேர்பு செய்யப்பட்ட திரு. டப். சுமித், திரு. ஜே.என். கயான் லக்மிண, திரு. இராஜா உதயகுமார் ஆகியோரின் சேவை காலத்தை 03 மாதங்களுக்கு நீடிப்பதற்கு அனுமதியை பெற்றுக்கொள்வதற்கு கௌரவ சபைக்கு முன்வைக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஆர். திசோக் அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 5**

பெல்மதுள்ள பிரதேச சபைக்கு ஊழியம் கொள்வனவு செய்யும் அடிப்படையில் கீழ் 03 மாதங்களுக்கு ஒரு தடைவ பணி பிரியும் விதத்தில் ஆட்சேர்பு செய்யப்பட்ட கீழ் பெயர் குறிப்படப்பட்டுள்ள ஊழியர்களின் பணி ஒப்பந்த காலத்தை 03 மாதங்களுக்கு நீடிப்பது உகந்தது என்று ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

| பெயர் | பதவி | பணி ஒப்பந்த காலம் |
|---|---|---|
| திரு. டப். சுமித் | சுகாதார ஊழியர் | 2026.02.11 – 2026.05.11 |
| திரு. ஜே.என். கயான் லக்மிண | சுகாதார ஊழியர் | 2026.02.20 – 2026.05.20 |
| திரு. இராஜா உதயகுமார் | சுகாதார ஊழியர் | 2026.02.11 – 2026.05.11 |

**ii. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திருமதி. டப்.எம். சிறியாணி வீரசேகர அவர்களின் பிரேரணைகள்**

01. ஹேன்யாய தொம்பகஸ்வின்ன கிராம உத்தியோகத்தர் பிரிவில் வசிக்கும் திருமதி. பீ.எச். சுரன்ஜி தர்சனி என்பவரின் வீட்டின் கூரை மட்டம் வரை நிர்மாணிக்கப்பட்டு உள்ள 2 அறைகள் மற்றும் வரவேற்பு அறை என்பவற்றிற்கு கூரை அஸ்பஸ்ரல் தகடுகள் தேவைப்பட்டு உள்ளன. மிதிகஹமுல்ல பொது நூலகத்தை பழுதுபாத்த சந்தர்ப்பத்தில் அகற்றப்பட்ட பழைய கூரையின் அஸ்பஸ்ரல் தகடுகளை திருமதி. பீ.எச். சுரன்ஜி தர்சனி என்பவருக்கு வழங்கவதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உப தலைவர் திரு. எச்.ஜீ. நலின் சேனக மாகம்மன அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், பழைய அஸ்பஸ்ரல் தகடுகளுக்கு பதிலாக புதிய அஸ்பஸ்ரல் தகடுகள் வழங்க முடியும் என்றால் அது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.டப். சோமரத்ன அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், அனைத்து தொகுதிகளிலும் வீடு கட்ட முடியாமல் ஆதரவற்று காணப்படும் குடும்பங்களை தேர்ந்தெடுத்து தொகுதி ஒன்றிற்கு இரண்டு நபர்களுக்கு அஸ்பஸ்ரல் தகடுகள் பெற்றுக் கொடுக்குமாறு கோருவதாக கௌரவ பிரதேச சபை உப தலைவர் திரு. எச்.ஜீ. நலின் சேனக மாகம்மன அவர்கள் தெரிவித்தார்.

**முடிவுகள் இலக்கம் 06**

ஹேன்யாய தொம்பகஸ்வின்ன கிராம உத்தியோகத்தர் பிரிவில் வசிக்கும் திருமதி. பீ.எச். சுரன்ஜி தர்சனி என்பவரின் வீட்டின் கூரை மட்டம் வரை நிர்மாணிக்கப்பட்டு உள்ள 2 அறைகள் மற்றும் வரவேற்பு அறை என்பவற்றிற்கு மிதிகஹமுல்ல பொது நூலகத்தை பழுதுபாத்த சந்தர்ப்பத்தில் அகற்றப்பட்ட பழைய கூரையின் பயன்பாட்டிற்கு எடுக்கக்கூடிய அஸ்பஸ்ரல் தகடுகளை வழங்குவது உகந்தது என்று ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

**iii. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.எம்.ஏ. இசுரு சம்பத் அலகியவன்ன அவர்களின் பிரேரணைகள்**

01. இதுவரை 2026 ஆம் ஆண்டிற்கு உரிய திறக்டர் வண்டிகள் பழுதுபார்த்தல்கள் மற்றும் மரங்கள் வெட்டி அகற்றுதல் விடயங்களுக்கு வழங்கற்காரர்கள் பதியப்பட்டு இல்லாததன் காரணத்தினால் பிரதேச மட்டத்தில் வழங்கற்காரர்களை பதிவது உகந்தது என்று பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. எம்.ஏ. புஸ்பகுமார தனசேகர அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், பெல்மதுள்ள பிரதேச சபையில் வழங்கற்காரர்கள் தங்களை பதிவுசெய்துகொள்வதற்கு விரும்பாத காரணம் இந்த விடயங்களை செய்துமுடித்த பின் ஏற்படும் சிக்கல்கள் காரணமாக என்றும், மரங்கள் வெட்டும் விடயங்களில் அதிக அளவிலான ஆபத்து நிலமைகள் காணப்படுவதால் அவர்களில் விலைகோரல்கள் அதிகம் என்பதாலும், அதனால் பிரதேச சபையில் வழங்கற்காரர்கள் தங்களை பதிவுசெய்துகொள்வது இல்லை என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டி.எம். மஞ்சுல தசநாயக்க அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், பிரதேச மட்டத்தில் வழங்கற்காரர்களை பதிவது உகந்தது என்றும், அரசினால் பிரதேச சபைக்கு உபகரணங்கள் வழங்கும் போது அபாயகரமான மரங்களை அகற்றுவதற்க பக்கட் லொரி ஒன்றை கோரி பெற்றுக்கொள்ள முடியும் என்றால் பிரயோசனமாக இருக்கும் என்றும், அப்போது அபாயகரமான மரங்களை அகற்றும் போது பிரதேச சபையின் தொழிலாளர்களை கொண்டு மரங்களில் கிளைகளை வெட்டி அகற்றுவதற்கு முடியும் என்றும், அப்போது மரங்களை பாதுகாக்கவும் முடியும் என்றும், இதன் மூலம் பிரதான வீதியின் இரு புறங்களில் உள்ள அபாயகரமான மரங்களின் கிளைகளை வெட்டி அகற்றுவதற்கு இயலுமை காணப்படுகிறது என்றும், அரசிடம் கோரிக்கை முன்வைத்து பிரதேச சபைக்கு பக்கட் லொரி ஒன்றை பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.டப். சோமரத்ன அவர்கள் தெரிவித்தார்.

**முடிவுகள் இலக்கம் 07**

2026 ஆம் ஆண்டிற்கு உரிய கட்டணங்கள் அறவிடாமல் திறக்டர் வண்டிகள் பழுதுபார்த்தல்கள் மற்றும் மரங்கள் வெட்டி அகற்றுதல் விடயங்களுக்கு பிரதேச மட்டத்தில் வழங்கற்காரர்கள் பதிவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

02. கல்லேபிட்ட தகனசாலைக்கு அருகில் இருக்கும் மாணிக்ககல் சுரங்கங்களின் உரிமையாளர்களினால் மேற்கொள்ளப்படம் மாணிக்கக்கல் அகழ்வு நடவடிக்கைகளினால் தகனசாலை வளாகத்திற்கு உள்வந்து இருப்பது நம்பகரமான தகவல்கள் மூலம் தெரியவந்து உள்ளது என்பதால் மற்றும் இதற்கு முன் இதுபோல் நடைபெற்று உள்ளது என்பதால் மிக விரைவாக பெகோ இயந்திரங்கள் மற்றும் தேவையான உபகரணங்களை பயன்படுத்தி இரத்தினக்கல் அதிகார சபையின் மேற்பார்வையின் கீழ் மற்றும் ஆலோசனைகளின் பிரகாரம் தகனசாலை வளாகத்தில் மாணிக்கக்கல் அகழ்வு உள்ள எல்லையில் அகழ்வு மேற்கொண்டு பரிசோதனை செய்வதற்கு தொழிநுட்ப சேவைகள் கமிட்டிக்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. எம்.ஏ. புஸ்பகுமார தனசேகர அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், தற்போது பிரதேச சபை எல்லையில் 01 மாணிக்கக்கல் சுரங்கம் வேலை செய்வதாகவும் இதற்கு முன்னர் 03 மாணிக்கக்கல் சுரங்கங்கள் வேலை செய்ததாகவும், சாதாரணமாக 15 அடிகளுக்கு கீழ் சுரங்கம் இருக்க முடியும் என்றும், நாங்கள் இரத்திணக்கல் அதிகார சபையுடன் கூடி பிரதேச சபை எல்லையில் பெகோ இயந்திரத்தை பயன்படுத்தி சுரங்க பாதையை கண்டறிய முடியும் என்றும், அப்போது பிரதேச சபை எல்லைக்கு உள் வந்திருக்கும் சுரங்கங்களுக்க தண்டப்பணம் விதிக்க முடியும் என்றும், இதை அடிப்படையாகக் கொண்டு இந்த பிரேரணையை முன்வைத்ததாகவும் அதன்போது அனைத்து சுரங்கங்களையும் அடையாளம் காண முடியும் எனவும் மேலும் சுரங்கம் தோண்டுவது நிறுத்தப்படும் என்றும் வெட்டப்பட்ட சுரங்கங்களுக்கு தண்டப்பணம் அறவிட முடியும் என்றும், எப்படி ஆயினும் கிடைக்கப்பெற்ற தகவல்களுக்கு ஏற்ப பெகோ இயந்திரம் மூலம் குழி தோண்டப்பட்டாலும் தகனசாலைக்கு பாதிப்பு ஏற்படாது என்றும் பெரிய கல் ஒன்றினால் தகனசாலை பாதுகக்கப்பட்டு உள்ளது என்றும், உகந்த முறை ஒன்றை பயன்னடுத்தி இந்த விடயத்தை முடிக்க வேண்டும் என்றும், கிடைக்கப்பெற்ற தகவல்களுக்கு ஏற்ப மாணிக்க கல் சுரங்கங்கள் வெகு ஆழத்தில் இல்லை என்றும் கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.எம்.ஏ. இசுரு சம்பத் அலகியவன்ன அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், இது தொடர்பாக பிரதேச சபை என்ற ரீதியில் தலையிட்டு விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றம், இதுவரை கிடைக்கப்பெற்ற தகவல்களுக்கு ஏற்ப அதிக மதிப்பிலான மாணிக்கக் கற்கள் கிடைத்துள்ளன என்றும் இதற்கு சாட்சியாக இரத்திணக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் கட்டுப்பபாட்டில் காணப்படும் மாணிக்கக் கற்கள் சாட்சி அளிக்கின்றன என்றும், இதுபோல் சுரங்கம் தோண்டி எங்கள் வளவிற்கு உள்நுழைந்தமைக்கு தண்டனை வழங்க வேண்டும் என்பதால் இது தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கை ஒன்றை தயார் செய்ய வேண்டும் என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், கடந்த கால கூட்டத் தொடர்களில் இது தொடர்பாக ஆலோசிக்கப்பட்ட போதிலும், இதுவரை இந்த நடவடிக்கைகள் நிறுத்தப்படவில்லை என்றும், இரத்திணக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை வந்து கள ஆய்வுகள் மேற்கொள்கின்றனர் மற்றம் சுரங்கங்களுக்கு சென்று ஆய்வுகள் மேற்கொள்கின்றனர் ஆனால் இன்னும் அது

நிறுத்தப்படவில்லை. தகனசாலை வளாகத்தில் பெகோ இயந்திரம் பயன்படுத்தி குழி தோண்டினால் மண்சரிவு ஏற்பட வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன. பெகோ இயந்திரம் பயன்படுத்தி குழி தோண்டுவது அத்துடன் இரத்தினக்கல் அதிகாரசபையின் அனுமதி பெற்று அதற்கு சமாந்திரமாக காணியின் எல்லையின் ஓரத்தில் ஆய்வு குழிகள் வெட்டுவது அப்படி செய்தால் தகனசாலைக்கு சுரங்கங்கள் தோண்டப்படுவது தடுக்கப்படும் என்றும் அப்படி தோண்டினால் எங்கள் குழிகளை கடந்து வர வேண்டும் என்றும், எங்களுடைய சொத்துக்களை பாதுகாக்க வேண்டும் என்றும், மழை காரணமாக மன்சரிவு ஏற்படும் அபாயம் காணப்படுகிறது என்பதல் NBRO அறிக்கை ஒன்று பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும், உகந்த விடயம் ஆய்வு குழிகள் என்றும், பெகோ இயச்திரம் பயன்படுத்தும் போது சுரங்க குழிகள் முடப்படுவதற்கு அதிக சந்தர்பம் உள்ளன என்றும், ஆய்வு குழிகள் இடும்போது கள ஆய்வு மேற்கொள்ள முடியும் என்றும், தற்போது காணப்படும் சுரங்கங்கள் தென்படும் என்றும், இந்த நடவடிக்கைக்கு அதிக செலவு ஏற்படாது என்றும், மேலும் NBRO அறிக்கை ஒன்று பெற்றுக்கொள்ள முடியுமானால் பெகோ இயந்திரம் பயன்படுத்தி குழிகள் தோண்டுவது பிரச்சினை இல்லை என்றும், அதுபோல் இயலாவிட்டால் ஆய்வு குழிகள் வெட்டுவது உகந்தது என்றும் என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.டப். சோமரத்ன அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், உரிய அனுமதி பெறப்பட்டு மாணிக்க சுரங்கம் அகழ்வது உகந்தது என்றும், இல்லைஎன்றால் இந்த நடவடிக்கையை நிறுத்த முடியாது என்றும், ஆய்வு குழிகள் வெட்டும் போது அங்கே காணப்படும் மாணிக்க மண் எடுக்க மாட்டார்களா என்ன? என்பது பிரச்சினையாக உள்ளது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. எஸ்.ஏ. சுகத் சான்த அமரசேகர அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், எதிர்கட்சித் தலைவர் கூறுவது போல தகனசாலை காணி மண்சரிவு அபாயத்திற்கு உள்ளாகி இருப்பதால் மண்சரிவு ஏற்பட்டால் அது தொடர்பாக நாங்கள் பொறுப்புக் கூற வேண்டிவரும் என்றும், ஆய்வு குழிகள் சந்தேகப்படும் இங்களில் தோண்டுவது உகந்தது என்றும், அப்போது அந்த சுரங்கங்கள் தெண்பட்டால் அவற்றின் உரிமையாளர்களுக்கு எதிராக வழக்குகள் பதியப்பட வேண்டும் என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. மஞ்சு டயஸ் விக்கிரமநாயக்க அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், தகனசாலை அமைந்துள்ளது சாய்வான காணியில் என்பதால் கட்டாயம் மாணிக்கல் கல் சுரங்கங்களில் இருந்து சுரங்க பதைகள் வந்தால் பிரதேச சபை என்ற ரீதியில் தேவையான நடவடிக்கைகள் எடுத்து அவற்றை தருத்து நிறுத்த வேண்டும் என்றும், எமது வளங்களை பாதுகாத்துக் கொண்டு இதை மேற்கொள்ள வேண்டும் என்றும், முதலில் நிலத்தின் தண்மைக்கு ஏற்ப தகனசாலைக்கு பாதிப்புக்கள் உள்ளனவா என்று ஆய்வுகள் மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்றும், நிலத்தின் தண்மைக்கு ஏற்ப தகனசாலை உயரமான இடத்தில் அமைந்துள்ளது. நாங்கள் என்ன நடவடிக்கைகள் மேற்கொண்டாலும் பிரதேச சபைக்கு சொந்தமான பெருமதி மிக்க சொத்தான தகனசாலை பாதுகாக்கப்படும் விதத்தில் உகந்த நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. பி. நிசான்த குமார புத்தாரச்சி அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், பிரதேச சபை தலைவரின் அதிகாரங்களை பயன்படுத்தி இரத்தணக்கல் அதிகாரசபையுடன் சேர்ந்து பிரதேச சபையின் நபர் ஒருவரை ஈடுபடுத்தி தடைசெய்து உரிய தண்டப்பணம் ஒன்றை விதிப்பது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உபதலைவர் திரு. எச்.ஜீ. நலின் சேனக மாகம்மன அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், உடனடி நடவடிக்கையாக கள ஆய்வு செய்து அறிக்கை வரும் வரை எங்கள் காணிக்கு சுரங்கம் வருகிறது என்றும், இந்த மாணிக்கக்கல் சுரங்கங்களை நிறுத்தமாறு இரத்திணக்கல் அதிகாரசபைக்க முறைப்பாடு ஒன்று முன்வைக்க வேண்டும் என்றும், மேலும் சுரங்க பாதை வருகிறது என்றால் தற்காலிகமாக அனுமதிப்பத்திரத்தை நிறுத்திவைத்தல் உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.டப். சோமரத்ன அவர்கள் தெரிவித்தார்.

**முடிவுகள் இலக்கம் 08**

மாணிக்கக்கல் சுரங்கத்தின் சுரங்க பாதைகள் பற்றி இரத்திணக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபைக்கு முறைப்பாடு செய்து உரிய நடைமுறைகளுக்கு ஏற்ப மாணிக்கக்கல் சுரங்கத்தை கள ஆய்வு செய்து பரிந்துரைகளுக்கு ஏற்ப உரிய சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொண்டு தற்காலிகமாக மாணிக்கக்கல் சுரங்கத்தை நிறுத்தி வைப்பதற்கும், உரிய மாணிக்கக்கல் சுரங்க உரிமையாளர்கள் மேற்கொண்டுள்ள பாதிப்புக்கள் தொடர்பாக முறையாக ஆய்வுகள் மேற்கொள்வதற்கும் இவற்றிற்கு உரிய அரச நிறுவனங்களை ஈடுபடுத்தி அதன் பின்னர் பெறப்படும் பரிந்துரைகளுக்கு ஏற்ப மிகவும் உகந்த நடைமுறை ஒன்றிற்கு ஏற்ப பெகோ இயந்திரம் பயன்படுத்தி அல்லது ஆய்வு குழிகள் தோண்டி அகழ்வு மேற்கொள்வது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

03. பிரதான அமைச்சில் இருந்து கிடைக்கப்பெற்ற அமுக்க அச்சுக்கள் (பரிசோதனை கட்டி) வாடகைக்கு விடும் போது ஒரு அச்சுக்காக நாள் ஒன்றிற்கு கட்டணம் ஒன்று அறவிடுவது உகந்தது என்று கிடைக்கப்பெற்ற பிரேரணை தொடர்பாக உகந்த முடிவு ஒன்றை எடுக்குமாறு கௌரவ சபைக்கு முன்வைக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. எம்.ஏ. புஸ்பகுமார தனசேனர அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், ஒப்பந்தக்காரர்கள் ஒப்பந்த திட்டங்களை மேற்கொள்ளாமல் இருக்கும் நிலை காணப்படுவதால் அமுக்க அச்சுக்களை வாடகைக்கு விடாமல் இலவசமாக வழங்குவதன் மூலம் ஒப்பந்தக்காரர்களை ஊக்கப்படுத்த முடியும் என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டி.எம். மஞ்சுல தசநாயக்க அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், இங்கு காணப்படும் நடைமுறை பிரச்சினை என்னவென்றால் அமுக்க அச்சுக்களை மீண்டும் ஒப்படைக்காமல் இருப்பது மற்றும் ஒப்படைப்பதற்கு எடுக்கும் காலம் அதிகமாக இருத்தல், மீண்டும் அமுக்க அச்சுக்களை பெற்றுக்கொள்வதற்கு உகந்த முறை ஒன்றை தயாரிக்க வேண்டும் என்று கௌரவ பிரதேச சபை தலைவர் திரு. எம்.ஜி.ஏ. தர்மசிறி மாணிபுற அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், இந்த அமுக்க அச்சுக்களை வழங்கும் போது ஒப்பந்தக்காரர்களிடம் இருந்து, இந்த அச்சுக்களை வழங்கும் போது ஒப்பந்த திட்டத்தின் வேலைகள் முடிவடைந்த உடன் அச்சுக்களை திருப்பி தருவதில் தாமதங்கள் ஏற்பட்டால் வைப்பு பணத்தில் இருந்த அந்த தொகையை பெற்றுக்கொள்வது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.எம்.ஏ. இசுரு சம்பத் அலகியவன்ன அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், ஒப்பந்தத்திற்கு மேலதிகமாக இந்த அச்சுக்களை வழங்கும் போது புதிய ஒப்பந்தம் ஒன்று ஒப்பமிட்டு வேலை தொடங்கும் 5-6 நாட்களுக்கு இலவசமாக வழங்கி எஞ்சிய தினங்களுக்க ரூபா. 100.00 தொகை ஒன்றை அறவிடுவது உகந்தது என்று பிரதேச சபை உறுப்பினர் திரு. ஆர்.எல். இந்திக கயான் லியனனே அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், ஒப்பந்தக்காரர்களுக்கு ஆக்க கூடுதலாக 10 நாட்கள் காலம் வழங்குவதற்கும், 10 நாட்கள் பிரதேச சபையின் கீழ் செய்யப்படும் ஒப்பந்த வேலை ஒன்று என்றால் இலவசமாக வழங்குவதற்கும், பிரதேச சபைக்கு வெளியே செய்யப்படும் ஒப்பந்த வேலை ஒன்று என்றால் ரூபா. 100.00 வீதமும், 10 நாட்களுக்கு பின் பிரதேச சபையின் கீழ் செய்யப்படும் ஒப்பந்த வேலை ஒன்று என்றால் நாள் ஒன்றிற்கு ரூபா. 250.00 வீதமும் அறவிட வேண்டும் என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. எம்.ஏ. புஸ்பகுமார தனசேகர அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், பிரதேச சபையின் ஊடாக செய்யப்படும் ஒப்பந்த வேலை ஒன்று என்றாலும் அது ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதால் குறித் தொகை ஒன்றை பெற்றுக்கொள்ள வேண்டும் என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. எஸ்.ஏ. சுகத் சாந்த அமரசேகர அவர்கள் தெரிவித்தார்.

**முடிவுகள் இலக்கம் 09**

அமுக்க அச்சுக்களை வழங்கும் போது அச்சு ஒன்றிற்கு நாள் ஒன்றிற்கு ரூபா. 100.00 வீதம் அறவிடுவது உகந்தது என்று ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

**iv. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே.ஜீ. சந்திரலால் ஜயரத்ன அவர்களின் பிரேரணைகள்**

01. கல்இன்ன கிராம உத்தியோகத்தர் பிரிவில் இளைஞர் மன்ற விளையாட்டு மைதானத்தில் மண் வெட்டி அகற்றுவதற்கு பெகோ இயந்திரத்தை பெற்றுத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். (இது ஊர் மக்களின் கோரிக்கை ஆகும்.)

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டப். மோஹான் மஞ்சுல அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 10**

கள ஆய்வு மேற்கொண்டு பெறப்படும் பரிந்துரைகளுக்கு ஏற்ப வருங்கால நடவடிக்கைகளை மேற்கொள்வது உகந்தது என்று ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

02. கல்இன்ன கிராம உத்தியோகத்தர் பிரிவில் பெல்வாடிய பேக்கரிக்கு அருகில் பொல்கஹதென்ன இற்கு செல்லும் வீதியில் வலது பக்கத்தில் உள்ள குறுக்கி வீதி (திரு. டி.கே. விஜேதாச வீட்டு புறத்திற்கு) வடிகால் குழாய் இட்டு இரண்டு பக்கங்களும் பக்க சுவர் இரண்டு நிர்மாணிப்பதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டப். மொஹான் மஞ்சுல அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், பெற்றுக்கொடுக்கும் வடிகால் குழாய்கள் உரிய இடத்தில் பொருத்தப்படுகின்றனவா என்று பின்தொடர் ஆய்வு செய்யப்பட வேண்டும் என்றும், பிரதேச சபை வடிகால் குழாய்கள் மட்டும் வழங்குமேயானால் மேற்கொண்டு எஞ்சிய வேலைகளை செய்வது யார் என்பதை தேடிப்பார்க்க வேண்டும் என்றும், இந்த வடிகால் குழாய்கள் பொருத்தும் போது பொருத்துதல் தொடர்பாக ஏதேனும் வழிகாட்டல்கள் தயாரித்து உரிய சங்கத்திற்கு பெற்றுக்கொடுக்க வேண்டும் என்று கொரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஆர்.எல். இந்திக கயான் லியனகே அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், வடிகால் குழாய்கள் வழங்கும் போது அந்த வீதியை பயன்படுத்தும் மக்களை இணங்கண்டு அவர்களின் கையெழுத்து ஆவணம் ஒன்றை பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும், நாங்கள் வழங்குவது வடிகால் சிலின்டர் மட்டும் என்றும், இரண்டு பக்கங்களிலும் பக்க மதில் சுவர்களை அவர்கள் கட்ட வேண்டும் என்றும், அந்த வேலையை பூர்த்தி செய்ய முடியும் என்றால் மாத்திரம் வடிகால் சிலின்டர் பெற்றுக் கொடுக்கப்படும் என்றும், பொது மக்களின் பங்களிப்புடன் மேற்கொள்ள முடியும் என்றால் மட்டும் வடிகால் சிலின்டர் பெற்றுக் கொடுப்பதற்கும், இல்லை என்றால் எழுத்து மூலமான கடிதம் ஒன்று பெற்றுக்கொண்டதன் பின்னர் வடிகால் சிலின்டர் பெற்றுக்கொடுத்தல் வெற்றியளிக்கும் என்று கொரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.டப். சோமரத்ன அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், இங்கே பெறுப்பானது உரிய தொகுதியின் உறுப்பினர்கள் பெறுப்பேற்க வேண்டும் என்றும், வடிகால் சிலின்டர்கள் தேவையான எண்ணிக்கையில் தருமாறு கௌரவ பிரதேச சபை தலைவர் திரு. எம்.ஜி.ஏ. தர்மசிறி மாணிபுற அவர்கள் தெரிவித்தார்.

**முடிவுகள் இலக்கம் 11**

கள ஆய்வு மேற்கொண்டு பெறப்படும் பரிந்துரைகளுக்கு ஏற்ப முற்பண அளவுகளை கருத்தில் கொண்டு வருங்கால நடவடிக்கைகளை மேற்கொள்வது உகந்தது என்று ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

03. மாவுதெல்ல கிராம உத்தியோகத்தர் பிரிவில் பனகம தெதொல கமவிற்கு மேல் உள்ள கற்பாரை வெடித்து தற்போது சில கற்கள் உருண்டு கீழே வந்து உள்ளன. இது மிகவும் அவதானமான விடயம் என்பதால் விரைவாக நடவடிக்கை எடுக்குமாறு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டப். மொஹான் மஞ்சுல அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 10**

இந்த பிரேரணை தொடர்பாக பெல்மதுள்ள பிரதேச செயலகத்தின் இடர் முகாமை பிரிவிற்கு தெரியப்படுத்துவது உகந்தது என்று ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

பெல்மதுள்ள பிரதேச சபைக்கு பணம் அறவிடுவதில் தாமதங்கள் ஏற்படுவதால் பொது சந்தையில் அறை இலக்கம் 14 கொண்ட மீன் கடை அறை தொடர்பாக முடிவு ஒன்று எடுப்பது அத்தியவசியமான விடயம் என்பதால் அவசர பிரேரணை கொண்டு வருவதாக கௌரவ பிரதேச சபை தலைவர் திரு. எம்.ஜி.ஏ. தர்மசிறி மாணிபுற அவர்கள் தெரிவித்தார்.

**அவசர பிரேரணைகள்**

**கௌரவ பிரதேச சபை தலைவர் திரு. எம்.ஜீ.ஏ. தர்மசிறி மாணிபுற அவர்களின் பிரேரணைகள்**

01. பெல்மதுள்ள பிரதேச சபைக்கு சொந்தமான பொது வார சந்தையில் இலக்கம் 14 கொண்ட மீன் கடை அறை தொடர்பாக 2026 ஆம் ஆண்டிற்கு குத்தகைக்கு வீடும் போது 2026.01.05 ஆம் திகதி முன்வைக்கப்பட்ட ஏலதாரர்கள் மற்றும் ஏல தொகைகள் கீழ் உள்ளவாறு ஆகும்.

| தொ. இல. | பெயர் | விலாசம் | வழங்கப்பட்டுள்ள ஆகக் குறைந்த ஏலத்தொகை | முன்வைத்துள்ள ஏலத்தொகை |
|---|---|---|---|---|
| 01 | திரு. எம். தில்ரங்க சான் ஹன்சக | போதிய வீதி, வெல்லந்துர, கஹவத்தை | ரூ. 420,000.00 | ரூ. 1,950,000.00 |
| 02 | திரு. எஸ்.கே.ஏ.டி.எம். அகில சமரசிங்க | இல.07, சுசிறிகம, எல்லெகேவத்த, கஹவத்தை | ரூ. 420,000.00 | ரூ. 920,500.00 |
| 03 | திரு. பி. ருமெஸ் மதுசங்க | சமதி மாவத்தை, ரில்ஹேன, கஹவத்தை | ரூ. 420,000.00 | ரூ. 823,000.00 |
| 04 | திரு. ஏ.டி. சானக சம்பத் | ஆகரேகம, வெல்அந்துர, கஹவத்தை | ரூ. 420,000.00 | ரூ. 625,000.00 |
| 05 | திருமதி. ஆர்.ஏ. ருவன் குமாரி அமரசிங்க | பேக்கரி அருகிலுள்ள வீதி, பாதகட, பெல்மதுள்ள | ரூ. 420,000.00 | ரூ. 471,999.00 |

அதன் அடிப்படையில் ஆகக்கூடிய விலைமனு தொகையை முன்வைத்துள்ள திரு. எம். தில்ரங்க சான் ஹன்சக என்பவர் இந்த கடை அறையை பெற்றுக்கொள்வது இல்லை என்றும், இரண்டாவதாக கூடிய விலைமனு தொகையை முன்வைத்துள்ள திரு. எஸ்.கே.ஏ.டி.எம். அகில சமரசிங்க என்பவரும் இந்த கடை அறையை பெற்றுக்கொள்வது இல்லை என்றும், தெரியப்படுத்தி உள்ளதால் இது தொடர்பாக உகந்த முடிவு ஒன்றை பெற்றுக் கொள்வதற்காக கௌரவ சபையிடம் முன்வைக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஆர்எல். இந்திக கயான் லியனகே அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், இந்த டென்டர் நடைமுறையை மேற்கொள்வதற்கு அதிக அளவில் நிதி செலவுகள் ஏற்படுவதால், திரு. எம். தில்ரங்க சான் ஹன்சக மற்றும் திரு. எஸ்.கே.ஏ.டி.எம். அகில சமரசிங்க என்பவர்கள் கடை அறையை பெற்றுக்கொள்வது இல்லை என்று தெரியப்படுத்தி உள்ளதால் இவர்களை மறுப்பு ஆவணத்தில் சேர்க்க வேண்டும் என்றும், இவர்கள் முறைகேடான விதத்தில் வியாபாரங்களில் ஈடுபட்டு பிரதேச சபைக்கு சொந்தமான மீன் கடையின் விலைமனுக்களை தந்திரமாக குறைக்கின்றனர் என்றும் மீண்டும் டென்டர் விடுவது உகந்தது என்றும் கௌரவ பிரதேச சபை தலைவர் திரு. எம்.ஜி.ஏ. தர்மசிறி மாணிபுற அவர்கள் தெரிவித்தார்.

**முடிவுகள் இலக்கம் 13**

போதிய வீதி, வெல்லந்துர, கஹவத்தை விலாசத்தில் வசிக்கும் திரு. எம். தில்ரங்க சான் ஹன்சக மற்றும் இல.07, சுசிறிகம, எல்லெகேவத்த, கஹவத்தை விலாசத்தில் வசிக்கும் திரு. எஸ்.கே.ஏ.டி.எம். அகில சமரசிங்க என்ற இருவரையும் மறுப்பு ஆவணத்தில் சேர்ப்பதற்கும், பெல்மதுள்ள நகரத்தில் அனுமதி இன்றி வியாபார நடவடிக்கையில் ஈடுபடும் அனுமதி அற்ற மீன் கடைகளை பொது சுகாதார பரிசோதகர், பெல்மதுள்ள பிரதேச சபை, போலிஸ் போன்ற நிறுவனங்கள் இணைந்து அகற்றுவதற்கும், இலக்கம் 14 கொண்ட மீன் கடை அறையை மீண்டும் டென்டர் விடுவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**vi. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டி.எம். மஞ்சுல தசநாயக்க அவர்களின் பிரேரணைகள்**

01. கிராமிய மட்டங்களில் போதைப்பொருள் ஒழிப்பு நிகழ்ச்சிகளை முறையாக நடத்துவது தொடர்பாக பொலிஸ் மற்றும் பிரதேச சபை இணைந்து செயல்படுத்துவதற்கு வேலைத்திட்டம் ஒன்றை தயாரிப்பதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. எஸ்.ஏ. சுகத் சாந்த அமரசேகர அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், கிராமிய மட்டங்களில் போதைப்பொருள் ஒழிப்பு நிகழ்ச்சிகள் நடத்துவது அவசியம் என்றும், இந்த போதைப்பொருட்கள் காரணமாக போபெத்த பிரதேசத்தில் இரண்டு நபர்கள் மரணமடைந்து உள்ளனர் என்றும், வீடுகளுக்கு அருகில் இந்த செயல்கள் நடைபெறுவதால் உகந்த பொறிமுறை ஒன்றை தயார் செய்யுமாறும், இணைப்பு குழு கூட்டத்திற்கு எங்கள் உறுப்பினர்கள் கலந்துகொள்வதற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்தித் தருமாறு கொரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டி.எம். மஞ்சுல தசநாயக்க அவர்கள் தெரிவித்தார்.

**முடிவுகள் இலக்கம் 14**

போபெத்த தொகுதியை மற்றும் பெல்மதுள்ள நகரத்தை முதன்மைப்படுத்தி போதைப்பொருள் ஒழிப்பு நிகழ்ச்சிகள் பொலிஸ் நிலையத்துடன் இணைந்து கலந்தாலோசித்து திட்டம் ஒன்றை தயாரிப்பது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

குப்பைகள் சேகரிக்கும் திறக்டர்களில் ஹோன் பொருத்துவதற்கும், அனுமதி அற்ற நிர்மானங்களை அகற்றுவதற்கு செல்லும் போது அந்த நிர்மானங்கள் தொடர்பில் ஆரம்பத்தை தேடிப்பார்க்க வேண்டும் என்றும் கௌரவ பிரதேச சபை உபதலைவர் திரு. எச்.ஜீ. நலின் சேனக மாகம்மன அவர்கள் தெரிவித்தார்.

வீதிகளை துப்புறவு செய்வதற்கு ஒரு குழுவை தயார்படுத்தி உள்ளதால் அது தொடர்பாக விடய உத்தியோகத்தரிடம் உள்ள புத்தகத்தில் வீதிகளை துப்புறவு செய்வதற்கு தேவையான இடத்தை குறிப்பிடுமாறும் முன்னுரிமை அடிப்படையில் இந்த விடயம் மேற்கொள்ளப்படும் என்று கௌரவ பிரதேச சபை தலைவர் திரு. எம்.ஜி.ஏ. தர்மசிறி மாணிபுற அவர்கள் தெரிவித்தார்.

முன்னால் அமைச்சர் திரு. துனேஸ் கங்கந்த அவர்களின் வீட்டிற்கு அருகில் கோப்ரா வீதி மின் விளக்கு ஒன்று பொருத்தப்பட்டு உள்ளது என்றும் தற்போது இந்த மின் விளக்கு செயல்பாட்டில் இல்லை என்பதால் அந்த இடம் பொதைப்பொருட் கைமாறும் இடமாக உறுவாகி உள்ளதால் அந்த இடத்திற்கு மின்குமிழ் ஒன்றை பொருத்துமாறும், வார சந்தைக்கு அருகில் மலசலகூடத்திற்கு அருகில் உள்ள வீதி மின் விளக்கிற்கு மின்குமிழ் ஒன்றை பொருத்துமாறும், வெள்ள காலத்தில் தெனவக ஆற்றில் அடித்த வரப்பட்ட குப்பைகள் ஒன்றுசேர்ந்து உள்ளதால் அந்த குப்பைகளை அகற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திருமதி. எம்.எஸ்.எஸ். மாகாவிட அவர்கள் தெரிவித்தார்.

பாதகட நுலகத்திற்கு அருகில் ஊர் மக்கள் பயன்படுத்தும் கிணறு ஒன்று உள்ளது என்றும், கிணற்றுக்கு அருகில் உள்ள வீதியை அபிவிருத்தி செய்யும் போது கிணற்றிற்கு பாதிப்பு ஏற்படும் விதத்தில் அந்த அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன என்றும், கிணற்றிற்கு பாதிப்பு ஏற்படாத விதத்தில் இந்த அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ளுமாறு அனைத்து ஊர் மக்களும் கோருவதாக கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. பி. நிசாந்த குமார புத்தாரச்சி அவர்கள் தெரிவித்தார்.

இது தொடர்பாக கடிதம் ஒன்று கிடைக்கப்பெற்று உள்ளது என்றும், தொழிநுட்ப உத்தியோகத்தர் களப் பரிசோதனை செய்து உள்ளர் என்றும், இந்த விடயத்தை மேற்கொள்ளும் போது பிரதேச சபை என்ற ரீதியில் இதை நிறுத்தியதாகவும், மீண்டும் அது சீர் செய்யப்பட்டு உள்ளது என்றும், கிணறு மற்றும் வீதி பிரதேச சபைக்கு உரித்தானவை அல்ல என்ற போதிலும் இந்த

கிணற்றை திருத்துவதற்கு பிரதேச சபை எதவி செய்து உள்ளது என்றும், இது தொடர்பாக 12 ஆம் திகதி விசாரணை ஒன்ற நடத்துவதாகவும் இங்கு சட்ட ரீதியான நிலமைகள் காணப்படுகின்றன என்றும் கௌரவ பிரதேச சபை தலைவர் திரு. எம்.ஜி.ஏ. தர்மசிறி மாணிபுற அவர்கள் தெரிவித்தார்.

பிரதேச சபையின் நிதிகள் செலவு செய்யப்பட்டு உள்ளது என்றால் இந்த கிணறு பொதுக் கிணறு ஒன்று ஆக இருத்தல் வேண்டும். ஏனெனின் தனிப்பட்ட விடயங்களுக்கு பிரதேச சபையின் நிதி செலவு செய்ய முடியாது. அப்படி என்றால் அது பிரதேச சபைக்கு உரித்தானதாக இருத்தல் வேண்டும் என்று கொரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.டப். சோமரத்ன அவர்கள் தெரிவித்தார்.

**07. செயற்பாட்டுக் குழுக்களின் அறிக்கைகள் முன்வைத்தல்கள் - இல்லை**

**08. பெறுவனவுகள் மற்றும் செலவுகள் பற்றிய மாதாந்த அறிக்கை, திரட்டப்பட்ட மாதாந்த வருமானம் பற்றிய மேம்பாட்டு அறிக்கை கௌரவ சபைக்கு முன்வைத்தல்**

2025.12.01 ஆம் திகதியில் இருந்து 2025.12.31 ஆம் தகதி வரையிலான மாதத்திற்கு உரிய பிரதேச சபையின் கொடுப்பனவு அறிக்கை அனுமதி வழங்கல் மற்றும் பெறுவனவுகள் மற்றும் செலவுகள் பற்றிய மாதாந்த அறிக்கை, திரட்டப்பட்ட மாதாந்த வருமானம் பற்றிய மேம்பாட்டு அறிக்கை என்பன  சபைக்கு முன்வைக்கப்பட்டன.

வீதி மின் விளக்குகள் பொருத்துவதற்கு பல தடவைகள் வீதி மின் விளக்குகள் கொள்வனவு செய்யப்பட்டு உள்ள போதிலும் அவற்றை பொருத்துதல் மற்றும் பராமரித்தல் தொடர்பாக முறையான அறிக்கை ஒன்றை தயாரிக்க வேண்டும் என்று கொரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.டப். சோமரத்ன அவர்கள் தெரிவித்தார்.

வீதி மின் விளக்குகள் பொருத்தும் போது உரிய சீரியல் இலக்கத்தை குறித்து வைத்துக் கொள்வதாகவும், பொருத்தும் இடத்திற்கு அருகில் உள்ள வீடு ஒன்றின் தொலைபெசி இலக்கம் பெற்றுக்கொள்ளப்படுகிறது என்றும், இதுவரை 400 வீதி மின் விளக்குகள் பொருத்தப்பட்டு உள்ளன என்றும், இன்னும் 250 வீதி மின் விளக்குகள் கிடைப்பதற்கு உள்ளன என்றும், இலக்கமிடல் நடவடிக்கைகளுக்கு வீதி மின் விளக்குகள் பொருத்தப்பட்டதன் பின்னர் நடைமுறை ஒன்றை தயாரிப்பதாகவும் கொரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டப்.ஏ. கயான் புஸ்பகுமார அவர்கள் தெரிவித்தார்.

வேறு விடங்கள்

- பிரதேச சபை உறுப்பினர்களின் பிரத்தியோக தெளிவுபடுத்தல்கள்
- பிரதேச சபைத் தலைவரின் நன்றியுரை

இன்று பிரதேச சபைக் கூட்டத்திற்கு வருகை தந்திருக்கும் கௌரவ எதிர்கட்சித் தலைவர் உட்பட பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் செயலாளர் உட்பட அலுவலக உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்து கௌரவ தலைவர் தனது நன்றி உரையை முடித்துக் கொண்டார்.

பி.ப. 12.40 மணி அளவில் சபைக் கூட்டம் முடிவடைந்தது.

தலைவர்
பிரதேச சபை
பெல்மதுள்ள